

தமிழ்நாடு துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் நேற்று (30.5.2025) சென்னை, தீவுத்திடலில் மீன்வளம் மற்றும் மீனவர் நலத் துறையின் சார்பில் நடைபெறும் "தமிழ்நாடு மீன் உணவு திருவிழா 2025 ஐ திறந்து வைத்தார். இந்நிகழ்வில் மீன்வளம் மீனவர் நலத்துறை மற்றும் கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் அனிதா ஆர். ராதாகிருஷ்ணன், இந்து சமயம் மற்றும் அறநிலையத்துறை அமைச்சர் பி.கே.சேகர்பாபு, நாடாளுமன்ற உறுப்பினர்கள் தயாநிதி மாறன், டாக்டர் கலாநிதி வீராசாமி, சட்டமன்ற உறுப்பினர்கள் ஆர்.மூர்த்தி, அ.வெற்றியழகன், ஏ.எம்.வி.பிரபாகர ராஜா, ஜோசப் சாமுவேல், தமிழ்நாடு மீன்வளர்ச்சிக் கழக தலைவர் ந.கௌதமன், கால்நடை பராமரிப்பு, பால்வளம், மீன்வளம் மற்றும் மீனவர் நலத்துறை செயலாளர் டாக்டர் என். சுப்பையன், மீன்வளம் மற்றும் மீனவர் நலத்துறை ஆணையர் இரா.கஜலட்சுமி, தேசிய மீன்பிடி மேம்பாட்டு வாரிய தலைமை நிர்வாகி டாக்டர் பிஜய் குமார் பெஹறா உள்பட உள்ளாட்சி அமைப்புகளின் பிரதிநிதிகள், மீனவர்கள் உடனிருந்தனர்.

### தீவுத்திடலில் மீனவர் நலத்துறை சார்பில்

# தமிழ்நாடு மீன் உணவுத் திருவிழா 2025!

## துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலின் திறந்துவைத்துப் பார்வையிட்டார்!

சென்னை, மே 31-

துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் சென்னை, தீவுத்திடலில் மீன்வளம் மற்றும் மீனவர் நலத் துறையின் சார்பில் நடைபெறும் "தமிழ்நாடு மீன் உணவு திருவிழா 2025" திறந்து வைத்து பார்வையிட்டார்.

துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் சென்னை, தீவுத்திடலில் நேற்று (30.5.2025) மீன்வளம் மற்றும் மீனவர் நலத் துறை சார்பில் இன்று 30.5.2025 முதல் 1.6.2025 வரை மூன்று நாட்கள் நடைபெறும் "தமிழ்நாடு மீன் உணவு திருவிழா 2025" திறந்து வைத்து பார்வையிட்டார்.

தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் மீனவர்களின் முன்னேற்றத்திற்காக திருவெற்றியூர் புதிய சூரை மீன்பிடி துறைமுகம், பட்டினப்பாக்கம் மீன் அங்காடி, சிந்தாதிரிப்பேட்டை புதுப்பிக்கப்பட்ட மீன் அங்காடி உள்பட பொதுமக்கள் வந்து செல்ல ஏதுவாக தமிழ்நாட்டின் பல்வேறு பகுதிகளில் மீன் அங்காடிகள் அமைத்தல், மீன் இறங்குதளங்கள், கூடுதல் படகு அணையும் தளம், படகு பழுதுபார்க்கும் தளம், அலை தடுப்புச் சுவர் அமைத்தல், தூண்டில் வளைவு அமைத்தல் என ஏராளமான வளர்ச்சித் திட்டப் பணிகளை மேற்கொண்டு வருகின்றார். அதன் ஒரு பகுதியாக பொதுமக்கள் மீன் உணவு வகைகள் குறித்து விரிவாக அறிந்து கொள்ள சென்னை தீவுத் திடலில் தமிழ்நாடு மீன் உணவு திருவிழா - 2025 நடத்த உத்தரவிட்டுள்ளார்கள்.

தமிழ்நாடு மீன் உணவு திருவிழாவையொட்டி சென்னை தீவுத்திடலில் 1,00,000 சதுர அடி பரப்பளவுள்ள குளிரூட்டப்பட்ட அரங்கம் அமைக்கப்பட்டு 50 அரங்கங்கள் கொண்ட சென்னை கடல்மீன் உணவு காட்சி கூடாரம், 15 அரங்கங்களுடனான மீன்வளம் மற்றும் வண்ண மீன்கள் காட்சிக்கூடாரம், 20 அரங்கங்களுடனான மீன் உணவு கூடங்கள், செயல்விளக்க கூட்ட அரங்கு ஆகியவை அமைக்கப்பட்டுள்ளன.

இந்த உணவுத் திருவிழாவையொட்டி கலைநிகழ்ச்சிகள் நடத்தப்பட உள்ளன. மேலும், சமயற்கலை மாணவர்கள் மற்றும் மீனவ மகளிருக்கு சமையல் போட்டிகளும் நடத்தப்பட உள்ளன.

கடல்மீன்கள், குறிப்பாக இறால் மீன்கள் குழந்தைகள் முதல் முதியவர்கள் வரை அனைவருக்கும் ஏற்ற புரதம் மற்றும் ஊட்டச்சத்துகள் நிறைந்த ஆரோக்கியமான உணவாக பரிந்துரைக்கப்படுகிறது. கடல்மீன்களில் ஒமேகா 3 கொழுப்பு அமிலம், ஐயோடின், தாதுக்கள், விட்டமின்கள் A, D, K உள்ளிட்ட பல்வேறு சத்துகள் உள்ளன. இது குறித்து பொதுமக்களுக்கு விழிப்புணர்வு ஏற்படுத்துவதற்காக இந்த கண்காட்சி நடத்தப்படுகிறது.

இந்நிகழ்ச்சியில் மீன்வளம் மீனவர் நலத்துறை மற்றும் கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் அனிதா ஆர்.ராதாகிருஷ்ணன், இந்து சமயம் மற்றும் அறநிலையத்துறை அமைச்சர் பி.கே. சேகர்பாபு, நாடாளுமன்ற உறுப்பினர்கள் தயாநிதி மாறன், டாக்டர் கலாநிதி வீராசாமி, சட்டமன்ற உறுப்பினர்கள் ஆர்.மூர்த்தி, அ.வெற்றியழகன், ஏ.எம். வி.பிரபாகர ராஜா, ஜோசப் சாமுவேல், தமிழ்நாடு மீன்வளர்ச்சிக் கழக தலைவர் ந.கௌதமன், கால்நடை பராமரிப்பு, பால்வளம், மீன்வளம் மற்றும் மீனவர் நலத்துறை செயலாளர் டாக்டர் என்.சுப்பையன், மீன்வளம் மற்றும் மீனவர் நலத்துறை ஆணையர் இரா. கஜலட்சுமி, தேசிய மீன்பிடி மேம்பாட்டு வாரிய தலைமை நிர்வாகி டாக்டர் பிஜய் குமார் பெஹறா உள்பட உள்ளாட்சி அமைப்புகளின் பிரதிநிதிகள், மீனவர்கள், பொதுமக்கள் கலந்து கொண்டனர்.

### 'செம்மொழி நாள்' முத்தமிழறிஞர் கலைஞர் பிறந்த நாளை

# கடலூர் கிழக்கு மாவட்டம் முழுவதும் நலஉதவிகள் வழங்கி சிறப்புடன் கொண்டாடுவீர்!

## மாவட்டக் கழகச் செயலாளர் – அமைச்சர் எம்.ஆர்.கே.பன்னீர்செல்வம் வேண்டுகோள்!



கடலூர், மே.31-

கடலூர் கிழக்கு மாவட்டத்தில் ஜூன் 3 அன்று முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் 102வது பிறந்த நாள் விழாவை செம்மொழி நாளாக கொண்டாட வேண்டுமென அறிவித்த முதலமைச்சர், கழக தலைவர் அவர்களின் அறிவிப்பின்படி மாநகரம், ஒன்றியம், நகரம், பகுதி, பேரூர், வட்டம், வார்டு, கிளைக்கழகங்கள் தோறும் 662 இடங்களில் திருவுருவ படத்திற்கு மாலை அணிவித்து, மலர்தூவி நலத்திட்ட உதவிகள் வழங்கி சிறப்பாக கொண்டாட வேண்டுமென கடலூர் கிழக்கு மாவட்ட திமுக செயலாளர், அமைச்சர் எம்.ஆர்.கே.பன்னீர்செல்வம் அறிக்கையில் கேட்டுக் கொண்டுள்ளார்.

இதுகுறித்து அவரது அறிக்கை வருமாறு :-

கடலூர் கிழக்கு மாவட்டத்தில் ஜூன் 3 அன்று முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் 102வது பிறந்த நாள் விழாவை செம்மொழி நாளாக கொண்டாட வேண்டுமென அறிவித்த தமிழ்நாடு முதலமைச்சர், கழக தலைவர் அவர்களின் அறிவிப்பின்படி மாநகரம், ஒன்றியம், நகரம், பகுதி, பேரூர், வட்டம், வார்டு, கிளைக்கழகங்கள் தோறும் 662 இடங்களில் திருவுருவ படத்திற்கு மாலை அணிவித்து, மலர்தூவி மரியாதை செலுத்தி, இளைஞர்கள், பெண்களுக்கான விளையாட்டுப் போட்டிகளை நடத்திப் பரிசுகளை வழங்கியும், ஏழை, எளிய மாணவியர்களுக்கு நோட்டுப் புத்தகங்கள் வழங்கியும் சிறப்பாக கொண்டாட வேண்டும்.

அதுசமயம், நிகழ்ச்சிகள் நடைபெறும் இடங்களில் கடலூர் கிழக்கு மாவட்டத்தைச் சேர்ந்த மாநில, மாவட்டக் கழக நிர்வாகிகள், மாநகர, ஒன்றிய, நகர, பகுதி, பேரூர் கழக செயலாளர்கள் மற்றும் நிர்வாகிகள், தலைமை செயற்குழு, பொதுக்குழு உறுப்பினர்கள், முன்னாள், இந்நாள் நாடாளுமன்ற, சட்டமன்ற உறுப்பினர்கள், முன்னாள், உள்ளாட்சி மன்ற பிரதிநிதிகள்,

மாநகர மேயர், ஒன்றிய குழுத்தலைவர்கள், மாவட்ட ஒன்றியக்குழு உறுப்பினர்கள், நகர மன்ற தலைவர்கள், பேரூராட்சி மன்ற தலைவர்கள், மாவட்ட ஒன்றியக்குழு உறுப்பினர்கள், மாநகர, நகர, பேரூராட்சி மன்ற உறுப்பினர்கள், இளைஞரணி, மாணவரணி, மகளிரணி, இலக்கிய அணி, கலை இலக்கிய பகுத்தறிவு பேரவை, தொண்டரணி, தொழிலாளர் அணி, மகளிர் தொண்டரணி, வழக்கறிஞர் அணி, மீனவரணி, நெசவாளர் அணி, விவசாய அணி, விவசாய தொழிலாளர் அணி, பொறியாளர் அணி, மருத்துவ அணி, வர்த்தகர் அணி, ஆதிதிராவிடர் நலக்குழு அணி, சிறுபான்மையினர் நல உரிமைப் பிரிவு, தகவல் தொழில்நுட்ப பிரிவு அணி, விளையாட்டு மேம்பாட்டு அணி, சுற்றுச்சூழல் அணி, அமைப்புசாரா தொழிலாளர் அணி,, அயலக அணி, தொழிலாளர் முன்னேற்றச்சங்கம் ஆகிய அணிகளின் நிர்வாகிகள் மற்றும் கழக முன்னோடி கள், கழக தோழர்கள் அனைவரும் தவறாமல் கலந்துக் கொள்ளுமாறு அன்புடன் கேட்டுக் கொள்கிறேன்.

இவ்வாறு அமைச்சர் எம்.ஆர்.கே.பன்னீர்செல்வம் அறிக்கையில் கேட்டுக் கொண்டுள்ளார்.

### நாளை ஜூன் 1 அன்று முதல்வர் – கழகத்தலைவர் தலைமையில்

# மதுரையில் நடைபெறும் பொதுக்குழு கூட்டத்தில் காஞ்சிபுரம் வடக்கு மாவட்டத்தினர் பங்கேற்பீர்!

## மாவட்டச் செயலாளர் – அமைச்சர் தா.மோ.அன்பரசன் வேண்டுகோள்!



காஞ்சிபுரம், மே.31-

நாளை ஜூன் 1 அன்று முதல்வர் - கழகத்தலைவர் அவர்கள் தலைமையில் மதுரையில் நடைபெறும் பொதுக்குழு கூட்டத்தில் காஞ்சிபுரம் வடக்கு மாவட்டத்தில் உள்ள பொதுக்குழு உறுப்பினர்கள் அனைவரும் தவறாமல் பங்கேற்க வேண்டும் என்று மாவட்டச் செயலாளர் அமைச்சர் தா.மோ. அன்பரசன் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

இது குறித்து அவர் வெளியிட்டுள்ள அறிக்கையில்:

நாம் நாளும் போற்றி வணங்கும் நம்முடைய உயிரினும் மேலான அன்புத்தலைவர் தளபதி அவர்களின் தலைமையில் நாளை ஜீன் 1-ஆம் தேதி ஞாயிற்றுக்கிழமை அன்று காலை 9.00 மணியளவில் மதுரை, உத்தங்குடி, "கலைஞர் திடலில்" நடைபெற இருக்கும் வரலாற்று சிறப்பு மிக்க பொதுக்குழு கூட்டத்தில்,

காஞ்சிபுரம் வடக்கு மாவட்டத்தைச் சேர்ந்த மாநில - மாவட்ட - மாநகர கழக நிர்வாகிகள், தலைமைச் செயற்குழு - பொதுக்குழு உறுப்பினர்கள், ஒன்றிய - நகர - பகுதி - பேரூர் கழகச் செயலாளர்கள், மாவட்ட - மாநகர இளைஞரணி அமைப்பாளர்கள் - துணை அமைப்பாளர்கள், மாவட்ட மாநகர கழக சார்பு அணிகளின் அமைப்பாளர்கள் மற்றும் பொதுக்குழு சிறப்பு அழைப்பாளர்கள் அனைவரும்,

தங்களுக்கு தலைமைக் கழகத்தில் இருந்து அனுப்பப்பட்ட கடிதத்தினை நேரில் எடுத்து வந்து, மதுரையில் பொதுக்குழு நடைபெறும் திடலில் முகப்பில் அமைப்பட்டுள்ள நமது காஞ்சிபுரம் வடக்கு மாவட்டத்தின் பெயர் பொறித்துள்ள கவுண்டரில் வைத்துள்ள 'மினிட்' புத்தகத்தில் கையொப்பமிட்டு தங்களுக்கென வழங்கப்பட்டுள்ள பொதுக்குழு 'பேட்ஜ்' ஐ பெற்றுக் கொண்டு, நாளை 1-ஆம் தேதி காலை 8.00 மணிக்குள் பொதுக்குழு நடைபெறும் கூட்ட அரங்கத்திற்குள் சென்று, நமது காஞ்சிபுரம் வடக்கு மாவட்டத்திற்கு ஒதுக்கப்பட்ட இடத்தில் அமர்ந்திட வேண்டும் என அன்புடன் கேட்டுக் கொள்கிறேன்.

இப்பொதுக்குழு கூட்டத்திற்கான அழைப்பு கடிதம் இதுவரை கிடைக்கப் பெறாத, பொதுக்குழு உறுப்பினர்கள் 1-ஆம் தேதி காலை 8.00 மணிக்கெல்லாம் மதுரையில் பொதுக்குழு நடைபெறும் திடலில் முகப்பில் அமைப்பட்டுள்ள நமது காஞ்சிபுரம் வடக்கு மாவட்ட கவுண்டருக்கு நேரில் வந்து 'மினிட்' புத்தகத்தில் கையொப்பமிட்டு, 'பேட்ஜ்' ஐ பெற்றுக் கொண்டு பொதுக்குழுக் கூட்டத்தில் அவசியம் பங்கேற்கும்படி கேட்டுக் கொள்கிறேன்.

இவ்வாறு அவர் தமது அறிக்கையில் கூறியுள்ளார்.



தமிழ்நாடு துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் நேற்று (30.5.2025) சென்னை, தீவுத்திடலில் மீன்வளம் மற்றும் மீனவர் நலத் துறையின் சார்பில் நடைபெறும் "தமிழ்நாடு மீன் உணவு திருவிழா 2025–ஐ திறந்து வைத்து, இறால் உணவினை 100 வகையாக சமைக்கும் முறைகள் குறித்த புத்தகத்தை வெளியிட்டார். இந்நிகழ்வில் மீன்வளம் மீனவர் நலத்துறை மற்றும் கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் அனிதா ஆர். ராதாகிருஷ்ணன், இந்து சமயம் மற்றும் அறநிலையத்துறை அமைச்சர் பி.கே.சேகர்பாபு, நாடாளுமன்ற உறுப்பினர்கள் தயாநிதி மாறன், டாக்டர் கலாநிதி வீராசாமி, சட்டமன்ற உறுப்பினர்கள் ஆர்.மூர்த்தி, அ.வெற்றியழகன், ஏ.எம்.வி.பிரபாகர ராஜா, ஜோசப் சாமுவேல், தமிழ்நாடு மீன்வளர்ச்சிக் கழக தலைவர் ந.கௌதமன், கால்நடை பராமரிப்பு, பால்வளம், மீன்வளம் மற்றும் மீனவர் நலத்துறை செயலாளர் டாக்டர் என். சுப்பையன், மீன்வளம் மற்றும் மீனவர் நலத்துறை ஆணையர் இரா.கஜலட்சுமி, தேசிய மீன்பிடி மேம்பாட்டு வாரிய தலைமை நிர்வாகி டாக்டர் பிஜய் குமார் பெஹறா உள்பட உள்ளாட்சி அமைப்புகளின் பிரதிநிதிகள், மீனவர்கள் உடனிருந்தனர்.

### முதல்வர் மு.க.ஸ்டாலின் பிறந்த நாள்: அமைச்சர் பி.கே.சேகர்பாபு ஏற்பாட்டில்

# அன்னம் தரும் அமுதக்கரங்கள் - 100வது நாள்!

## அமைச்சர் எ.வ.வேலு காலை உணவு வழங்கி – 127 பேருக்கு கணையாழி அணிவித்தார்!





சென்னை, மே.31-

"அன்னம் தரும் அமுதக்கரங்கள்" வெற்றிகரமாக 100வது நாளான இன்று சிறப்பு அழைப்பாளராக பொதுப்பணித் துறை அமைச்சர் எ.வ.வேலு கலந்து கொண்டு கொளத்தூர் பகுதியில் காலை உணவு வழங்கி, கடந்த 100 நாட்களாக அமுதக்கரங்களுக்காக உழைத்த கழக நிர்வாகிகளை கௌரவிக்கும் விதமாக 127 நபர்களுக்கு கணையாழி மற்றும் புத்தாடைகள் வழங்கி சிறப்பித்தார்.

முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்களின் பிறந்த நாளை முன்னிட்டு மக்கள் முதல்வரின் மனிதநேய விழாவாக சென்னை கிழக்கு மாவட்டம் ஆண்டுதோறும் கொண்டாடி வருகிறது. இந்த ஆண்டு கழகத் தலைவரின் 72வது பிறந்த நாளையொட்டி, இந்து சமய அறநிலையத்துறை அமைச்சர் பி.கே. சேகர்பாபு ஏற்பாட்டில் "அன்னம் தரும் அமுதக்கரங்கள்" மாபெரும் உன்னதமான திட்டமானது 2025 பிப்ரவரி 20ஆம் தேதி முதல், 2026 பிப்ரவரி 19ஆம் தேதி வரை 365 நாட்களும், நாள் ஒன்றுக்கு 1000 நபர்களுக்கு மேல், வெவ்வேறு இடங்களில் காலை உணவு வழங்க திட்டமிடப்பட்டுள்ளது.

இச்சிறப்புமிகு திட்டத்தை செயல்படுத்தும் வகையில் 20.2.2025 அன்று கொளத்தூரில் மதிப்புமிகு அண்ணியார் திருமதி.துர்கா ஸ்டாலின் அவர்களுடைய திருக்கரங்களால் தொடங்கி வைத்து சிறப்பித்தார்கள். அந்த வகையில் 24ஆம் நாள் உணவு மற்றும் உணவுப் பொருள் வழங்கல்துறை அமைச்சர் அர. சக்கரபாணி அவர்களும், 30வது நாள் உயர்கல்வித் துறை அமைச்சர் டாக்டர் கோவி. செழியன் அவர்களும், 50வது நாள் கைத்தறி மற்றும் துணிநூல்துறை அமைச்சர் ஆர்.காந்தி அவர்கள், 75வது நாள் மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் மா.சுப்பிரமணியம் கலந்து கொண்டு காலை உணவு வழங்கி சிறப்பித்தார்கள்.

இந்நிகழ்ச்சியானது வெற்றிகரமாக தொடர்ந்து 100வது நாளான நேற்று (30.5.2025), கொளத்தூர் மேற்கு பகுதி, 69வது வார்டு, ஜி.கே.எம். காலனி, 13வது தெரு மற்றும் 64வது வார்டு, ராஜாஜி நகர், காமராஜ் தெரு ஆகிய இடங்களில் நடைபெற்ற நிகழ்ச்சியில் சிறப்பு அழைப்பாளராக பொதுப் பணித்துறை அமைச்சர் எ.வ.வேலு அவர்கள் கலந்து கொண்டு பொதுமக்களுக்கு காலை உணவு வழங்கி, கடந்த 100 நாட்களாக அமுதக்கரங்களுக்காக உழைத்த கழக நிர்வாகிகளை கௌரவிக்கும் விதமாக 127 நபர்களுக்கு கணையாழி மற்றும் புத்தாடைகள் வழங்கி சிறப்பித்தார்.

இச்சிறப்புமிக்க "அன்னம் தரும் அமுதக்கரங்கள்" திட்டத்தில் இந்து சமய அறநிலையத்துறை அமைச்சர் பி.கே.சேகர்பாபு தினந்தோறும் காலை 7.00 மணியளவில் கலந்து கொண்டு பசியாக வரும் பொது மக்களுக்கு, பசியாற காலை உணவு வழங்கிக் கொண்டிருக்கிறார். இச்சிறப்புமிக்க திட்டமானது பொதுமக்கள் மத்தியில் மிகுந்த வரவேற்பை பெற்று, அப்பகுதி மக்கள் அனைவரும் மகிழ்ச்சியோடு காலை உணவு அருந்தி விட்டு, தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களை வாழ்த்தி வருகிறார்கள்.

"அன்னம் தரும் அமுதக்கரங்கள்" மாபெரும் திட்டமானது இன்றுடன் (30.5.2025) தற்பொழுது 100 நாள் கடந்து, 2026 பிப்ரவரி 19ஆம் தேதி வரை தொடர்ச்சியாக துறைமுகம், திரு.வி.க நகர், அம்பத்தூர், வில்லிவாக்கம், எழும்பூர் தொகுதிகள் என கிழக்கு மாவட்டத்திற்கு உட்பட்ட அனைத்து தொகுதிகளிலும் வழங்கப்பட்டு வருகிறது. திராவிட மாடலின் செயல்களில் ஒன்றாக இத்திட்டம் நடத்துவதில் சென்னை கிழக்கு மாவட்டம் பெருமை கொள்கிறது.

பொதுப்பணித்துறை அமைச்சர் எ.வ.வேலு அவர்கள் தெரிவித்ததாவது:

தமிழ்நாடு முதலமைச்சர்மு.க.ஸ்டாலின் அவர்களின் பிறந்தநாளை முன்னிட்டு, "அன்னம் தரும் அமுதக்கரங்கள்" பெயரில் ஒரு நாளைக்கு 1000 நபர்களுக்கு இந்து சமய அறநிலையத்துறை அமைச்சர் பி.கே.சேகர்பாபு காலை உணவு களை வழங்கி வருகிறார்.

சென்னை கிழக்கு மாவட்ட திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பில் பசிப்பிணியை போக்கும் ஒரு அற்புதமான நிகழ்ச்சியை ஓராண்டு காலம் என்று முடிவு எடுத்து, பிப்ரவரி திங்கள் 20ஆம் தேதி மதிப்புமிகு அண்ணியார் திருமதி. துர்கா ஸ்டாலின் கலந்து கொண்டு தொடங்கி வைத்து இன்றைக்கு தினந்தோறும் இந்த காலை உணவு திட்டத்தை மிகச் சிறப்பாக நடத்திக் கொண்டிருக்கின்றார்.

மனித நேயம் என்றால் பிறர் பசியாற்றுவதுதான் இது தான் மனிதநேயத்தின் உச்சம். 18 ஆம் நூற்றாண்டு க்கு பிற்பகுதியில் இருந்து தமிழை வளர்த்தது திராவிட இயக்கம், 5 ஆம் நூற்றாண்டில் இருந்து 18 ஆம் நூற்றாண்டு வரை தமிழை வளர்த்தது பக்தி இலக்கியம். தமிழ்நாட்டின் 234 தொகுதிகளிலும் கொளத்தூர் நம்பர் ஒன் தொகுதியாக உள்ளது என்றார்.

இந்நிகழ்ச்சியில் இந்து சமய அறநிலையத்துறை அமைச்சர் பி.கே.சேகர்பாபு தெரிவித்ததாவது:

உணர்ச்சி கலந்த கூட்டம் கிழக்கு மாவட்டத்தில் இருப்பதால் தான் சொல்கிறேன், இந்த அமுத கரங்கள் நிகழ்ச்சி ஓராண்டுகள் தொடர்ந்து நடக்கும். 2026 சட்டமன்ற தேர்தலில் கிழக்கு மாவட்ட தொகுதியில் உள்ள 6 சட்டமன்ற தொகுதியிலும் வெற்றி பெற்றால் தான் 100க்கு 100 வெற்றி கிடைக்கும் என்றார்.

இந்நிகழ்ச்சியில் மேயர் ஆர்.பிரியா, சட்டமன்ற உறுப்பினர்கள்: ப.தாயகம் கவி, அ. வெற்றிஅழகன், ஜோசப் சாமுவேல், தமிழ்நாடு சேமிப்பு கிடங்கு நிறுவன வாரியத் தலைவர் ப.ரங்கநாதன், பகுதி செயலாளர்கள்: எ.நாகராஜன், ஐசிஎப்.வ.முரளிதரன், தலைமை செயற்குழு உறுப்பினர்கள்: சந்துரு, மகேஷ்குமார், மண்டலக் குழுத்தலைவர் திருமதி.சரிதா மகேஷ்குமார், மாவட்ட துணைச் செயலாளர் தேவஜவகர், வட்டச்செயலாளர்கள் எம்.டி.தமிழ்ச்செல்வன், எஸ்.முருகன், மாநில, மாவட்ட, பகுதி, வட்ட கழக நிர்வாகிகள் மற்றும் அணிகளின் நிர்வாகிகள் மற்றும் கழகத் தோழர்கள் கலந்து கொண்டு சிறப்பித்தனர்.



முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் பிறந்தநாள் விழா வருகின்ற ஜூன் 3ஆம் தேதியன்று நடைபெறுவதை முன்னிட்டு, தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித் துறை அமைச்சர் மு.பெ.சாமிநாதன் நேற்று, சென்னை, அண்ணா சாலை, ஓமந்தூரார் வளாகத்தில் அமைந்துள்ள முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் திருவுருவச் சிலையினை நேரில் பார்வையிட்டு ஆய்வு செய்து, விழா முன்னேற்பாடு பணிகள் குறித்து கேட்டறிந்தார். ஆய்வின்போது தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித் துறை செயலாளர் வேராஜாராமன், செய்தி மக்கள் தொடர்புத் துறை இயக்குநர் பருஇரா.வைத்திநாதன் மற்றும் செய்தித் துறை உயர் அலுவர்கள் உடனிருந்தனர்.